**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 221** **நாள்: 18.06.2026**

**மெக்சிகோவில் நடைபெற்ற Street Child Football World Cup 2026 போட்டியில் இந்திய அணியின் சார்பில் விளையாடி சாதனை படைத்த பெருநகர சென்னை மாநகராட்சியின் பெண் குழந்தைகள் காப்பகத்தின் சிறுமிகளை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி. எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள் பாராட்டினார்.**

மெக்சிகோவில் நடைபெற்ற Street Child Football World Cup 2026 போட்டியில் இந்திய அணியின் சார்பில் விளையாடி சாதனை படைத்த தண்டையார்பேட்டையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி பெண் குழந்தைகள் காப்பகத்தில் உள்ள சிறுமிகளை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி. எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள், இன்று (18.06.2026) ரிப்பன் கட்டட வளாக அலுவலகக் கூட்டரங்கில் பாராட்டி வாழ்த்தினார்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் செயல்பட்டு வரும் Karunalaya Social Service Society இல்லமற்ற பெண் குழந்தைகளுக்கான காப்பகத்தில் உள்ள 5 சிறுமிகள், Street Child Football World Cup 2026 போட்டியில் இந்திய மகளிர் அணியில் பங்கேற்று, உலக அரங்கில் சிறப்பான சாதனை படைத்துள்ளனர்.

மெக்சிகோ நாட்டில் இந்தப் போட்டி 2026 மே மாதத்தில் நடைபெற்றது. இதில் மாநகராட்சியின் காப்பகத்தைச் சேர்ந்த அணித்தலைவி வி. பவித்ரா, கோல் கீப்பர் சி. பூங்கோதை, டிபெண்டர்கள் ஆர். வைதேஸ்வரி, சி. ஷர்மிளா ஆகியோர் இந்திய அணியில் பங்குபெற்று விளையாடினர்.

பல்வேறு சமூகத்தின் பின்னணியிலிருந்து வந்த 10 வீராங்கனைகள் கொண்ட இந்திய அணி சிறப்பாக விளையாடியது. போட்டியின் ஆரம்பச் சுற்றுகளில் இந்திய அணியானது வேல்ஸ் (Wales) மற்றும் பாலஸ்தீனம் (Palestine) அணிகளை எதிர்கொண்டு வென்றதுடன், ஜெர்மனி (Germany) மற்றும் மெக்சிகோ (Mexico) அணிகளுடன் டிரா செய்தது.

இந்த வெற்றிகளின் மூலம் இந்திய அணி அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறி, உலகக்கோப்பை அரங்கில் வரலாற்றுச் சாதனை படைத்தது. அரையிறுதியில் பிரேசில் (Brazil) அணியுடன் மோதிய இந்திய அணி சிறப்பாக விளையாடியது. மேலும், இப்போட்டியில் இந்திய அணி இரண்டு விருதுகளை வென்று நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளது.

இந்த சாதனையானது பெண் குழந்தைகள் காப்பகத்தில் வாழும் குழந்தைகளுக்கு சரியான வழிகாட்டுதல், வாய்ப்பு மற்றும் ஊக்கமளிக்கப்பட்டால் அவர்கள் உலகளவில் சாதிக்க முடியும் என்பதை நிரூபிக்கிறது. பெருநகர சென்னை மாநகராட்சியின் சமூக மேம்பாட்டுப் பிரிவு, குழந்தைகளின் திறமைகளை வளர்த்து, அவர்களின் முழுமையான முன்னேற்றத்திற்காக தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இந்த சிறப்பான சாதனையை நிகழ்த்திய அனைத்து சிறுமிகளுக்கும், பயிற்சியாளர்களுக்கும், கருணாலயாவின் நிர்வாகிகளுக்கும் பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையாளர் அவர்கள் தனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், தலைமை சமுதாய வளர்ச்சி அலுவலர் திரு.ராஜ்குமார், பாலின மற்றும் கொள்கை ஆய்வக குழுத் தலைவர் திருமதி லெஜிஸ், கருணாலயா பெண் குழந்தைகள் காப்பகத்தின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**